Nallur Branch Library

Registered as a Newspaper

வெளிநாட்டுப் பிரயாணம்
திறமையான சேவைக்கும், நம்பிக்கைக்கும், செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

ரெலிபோன் ரெலக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe Vehicle Parking
MCT 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

ஏடு:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 6 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 14 (22-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 210

# தமிழ் மொழி மாநில கோரிக்கைக்கு அரசின் பதில் எதுவுமே இல்லை

## எனினும் கூட்டணி நேற்றும் தொடர்ந்து ஜே. ஆருடன் பேச்சு

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஜூலை 22

கடந்த ஒரு வாரமாக ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மொழி மாநிலக் கோரிக்கையை முன்வைத்தது. ஆனால் அதற்கு இன்னும் அரசாங்கம் பதில் கொடுக்கவில்லை.

இவ்வாறு அரசுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

எனினும் கூட்டணித் தூதுக்குழு நேற்றும் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியது.

தமிழ் மொழி மாநிலக் கோரிக்கையையே தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் நேற்றைய பேச்சின் போது மீண்டும் வலியுறுத்தியதாகவும் அறியவருகிறது.

தமிழ்மொழி மாநில அடிப்படையில் தான் சுயாட்சி அதிகாரப் பரவலாக்கல் இடம்பெற வேண்டும் என்பதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் குறைந்த பட்சக் கோரிக்கை என்று இலங்கை அரசு வட்டாரங்களுக்கு வலியுறுத்தப்பட்...

(4 ஆம் பக்கம் பார்க்க)



முச்சந்தி முனி

யாழ்ப்பாணத் திலை நேரம் தின்டா, உண்மை நிலையைக் கூடக் குறைய அறிஞ்சிடுவார் என்ட பயமோ பின்னே......

### சுபநேரம்

22—07—1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10-31 முதல் 12-01 வரை
ராகுகாலம்:
03-01 முதல் 04-31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# இந்திய மீனவர் கணபதி விமானத்தில் கொழும்பு சென்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 22

இந்திய மீனவர் வேலுத்தேவன் கணபதி நேற்று விசேஷ விமான மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. ஹார்டிப் பூரியிடம், திரு. வேலுத்தேவன் கணபதியை யாழ். வைத்திய அத்தியட்சகர் திரு. எஸ். நச்சினார்க்கினியர் ஒப்படைத்தார்.

நண்பகல் 11 மணி அளவில் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்த பூரி இந்திய மீனவர் கணபதியைப் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

யாழ் ஆயர் இல்லம் நல்லூர் கந்தசுவாமி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### காங்கேசனில் மாக் கப்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

நேற்று முன்தினம் 1000 தொன் மாவுடன் காங்கேசன்துறை வந்து சேர்ந்த "மத்துறட்ட" கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. (க-5)

# வெள்ளியன்று கறுப்பு நாள்

## அன்னையர் முன்னணி ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 22

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (ஜூலை 25) நண்பகல் 12 மணிக்கு ஆலய, தேவாலய மணிகள் இரு நிமிடங்கள் ஒலிக்கப்பட வேண்டும். மக்கள் மூன்று நிமிடங்கள் தாங்கள் இருக்கும் இடங்களில் இருந்து எழுந்து நின்று மௌன அஞ்சலியில் ஈடுபட வேண்டும்.

ஜூலை 25ஆம் திகதியை துக்க நாளாக அனுஷ்டிக்கும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோள் ஒன்றில் அன்னையர் முன்னணி மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

1983 ஜூலை இனக் கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறையிலும் ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்கள் படு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரயாண ஒழுங்குகள்

● கனடா
● டென்மார்க்
● சவூதி

(அ) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

(ஆ) சவூதி அரேபியாவுக்குச் செல்லவிரும்புவோர்க்கு 22, 23, 24ஆம் திகதிகளில் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

(இ) கனடா, டென்மார்க், சவூதி ஆகிய நாடுகளுக்குப் பாஸ்போட், முற்பணம் கொடுத்தவர்கள் 21ஆம், 22ஆம், 23 ஆம் திகதிகளில் காரியாலயத்தில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு:

N. BALA
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

கஸ்வழி இலக்கம்:
764, பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,

### திருமலையில் ஐவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 22

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவங்களின் போது ஐந்து பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

சீருடையினர் தமிழர் ஒருவரை சுட்டுக் கொன்ற பின்னர் காரோடு சேர்த்து எரித்தனர்.

இது தவிர, இரண்டு தமிழர்களும், இரண்டு முஸ்லிம்களும் ஞாயிறு மாலை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### இன்று ஹர்த்தால்

யாழ் முஸ்லிம் மக்களின் ஏற்பாட்டின் கீழ் இன்று யாழ் நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

முஸ்லிம் மக்கள் ஒழுங்கு செய்யும் ஊர்வலம் ஒன்றும் நடைபெறும்.

கடந்த மாதம் 24ஆம் திகதி யாழ் முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தையும் கொலைச்சம்பவத்தையும் கண்டித்தே இந்த ஊர்வலமும் ஹர்த்தாலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதே வேளை இன்று நடைபெறும் ஊர்வலத்தில் இனவேறுபாடு காட்டாது அனைவரையும் பங்கேற்கும்படி நேற்று நகரில் ஒலிபரப்பு மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (இ-10)

# இந்திய உயர் அதிகாரி பூரிக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம்!

## யாழ். கோட்டை முகாமில் இருந்து ஆஸ்பத்திரிக்கு நடந்து வந்தார்!

— அலுவலகச் செய்தியாளர் கே. ஆர் —

யாழ்ப்பாணம், ஜூலை22

நேற்று யாழ்ப்பாணம் வந்த இந்திய ராஜதந்திரியான திரு. ஹார்டிப் பூரி மிகவும் கசப்பான அனுபவங்களுடன் கொழும்பு திரும்பினார்.

காலை 7-30 மணிக்கு பலாலி வரவேண்டிய விமானம் மிகப் பிந்தியே அங்கு வந்து சேர்ந்தது.

காலை சுமார் பத்து மணிக்கு கோட்டை முகாம் வந்து சேர்ந்த அவர் ஒரு மணித்தியாலம் காத்திருந்தார். இராணுவத்தினர் ஏற்பாடு எதுவும் செய்யாததால் அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு நடந்து வந்தார்.

நேற்றுக் காலை 7 30 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் வந்திறங்க ஏற்பாடாகி இருந்த திரு. பூரியை வரவேற்பதற்கென யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசிங்கம், சட்டத்தரணி திரு. ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் சென்றிருந்தனர்.

காலை 8 30 மணியாகியும் திரு பூரி வந்து சேரவில்லை.

திரு பூரி வருவதற்கு நேரம் செல்லும் என்றும் —

அப்படி அவர் நேரம் தாழ்த்தி வந்தாலும் நகருக்கு வந்து இந்திய மீனவர் கணபதியை அழைத்துச் செல்லக் கூடியதாக இருக்காது என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

ஆகையினால் மீனவர் கணபதியை பலாலி முகாமுக்கு அழைத்து வரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

அடம்பன் பேசாலை கொலைகளைக் கண்டித்து

# மன்னாரில் நேற்று ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மன்னாரில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த வாரம் அடம்பன் பேசாலை பகுதிகளில் நடந்த படுகொலைகளைக் கண்டித்தும்—

அந்தச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தனியார் வாகனங்கள் அரச வாகனங்கள் எதுவும் சேவையில் ஈடுபடவில்லை. கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் அரச அலுவலகங்கள் எதுவுமே இயங்கவில்லை.

வீதியெங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இடையிடையே ஆங்காங்கே குண்டுகளும் வெடிக்கப்பட்டன.

பொலிஸ் ரோந்துச் சேவையும் நேற்று நிறுத்தப்பட்டிருந்தது. (உ 10)

# அக்கரைப்பற்றில் 10 விவசாயிகள் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 22

அக்கரைப்பற்றில் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த பத்து தமிழ் விவசாயிகள் சீருடையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்தது.

இதேவேளை நேற்று மாலை மட்டக்களப்பு சரடி ஊறு முகாமுக்கு அருகில் பூலாஞ்சோலை என்னும் இடத்தில் சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தமிழர் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர்.

சுமார் ஐந்து வீடுகள் எரிக்கப்பட்டன. (உ)

### வியாழன் சென்னைக்கு?

பெரும்பாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வியாழன், அல்லது வெள்ளிக்கிழமை சென்னை திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையில் அமைச்சர்கள் காமினி திஸநாயக்கா, ரொனிடிமெல் ஆகியோரை கூட்டணித் தலைவர்கள் நேற்று மாலை தனித்தனியே சந்தித்துப் பேசினர். (உ-எ)



இந்திய தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு பூரி யாழ். ஆஸ்பத்திரியை நேற்றுப் பார்வையிட்ட போது எடுக்கப்பட்ட படம். யாழ் வைத்திய அத்தியட்சகர் திரு எஸ் நச்சினார்க்கினியன் அருகில் காணப்படுகிறார்.

# கூட்டணித் தலைவர்களைச் சந்திக்க சுதந்திரக் கட்சியினர் தயக்கம்

கொழும்பு, ஜூலை 22

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களைச் சந்திப்பதில் சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடம் தயக்கம் காட்டுகிறது.

சுதந்திரக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து இனப்பிரச்சினை பற்றிப் பேச தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தங்கள் விருப்பத்தை சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடத்துக்குத் தெரியப்படுத்தினராம்.

ஆனால் சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடமோ இன்னும் தங்கள் பதிலைத் தெரிவிக்கவில்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் அறிகின்றன.

இதனிடையில் லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் கடந்த ஞாயிறு கூட்டணித் தலைவர்களைச் சந்தித்தனர்.

நேற்று இலங்கை மக்கள் கட்சித் தலைவர்கள் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்து உரையாடினர். (இ-எ)

# நிபந்தனை இல்லையேல் கொழும்பிற்கு வந்து

## பேசவும் புலிகள் தயார் -- வாசு

கொழும்பு, ஜூலை 22

கொழும்புக்கு வந்து பேசவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர். ஆனால் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்ற அரசின் நிபந்தனையை ஏற்று பேச்சுக்களை நடத்த அவர்கள் தயாராக இல்லை.

இப்படி நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. வாசுதேவ நாணயக்கார நேற்று கொழும்பில் நடத்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னர் திரு வாசுதேவ நாணயக்கார நேற்றுக் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திரு வாசுதேவ நாணயக்கார மேலும் சொன்னதாவது:

அரசியல் தீர்வுகாணுவதில் போராளிகளும் நாட்டம் காட்டுகின்றனர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு, தமி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சங்கம் மூலம் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஆனையிறவுக்கு அப்பால் செல்லும் வாகனங்களுக்குரிய அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை வட பிராந்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ராக்கிங் பற்றி புலிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

'ராக்கிங்' என்ற பெயரில் இடம்பெறும் வன்முறை அட்டகாசங்கள் பற்றியும்—

கடந்த காலங்களில் இதன் பெயரில் ஆபத்தான சில சம்பவங்கள் மேலும் தொடராது தடுப்பது பற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

'ராக்கிங்' என்ற போர்வையில் சில சக்திகள் தமது பாலியல் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ள முயலுவதை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சகல லொறி உரிமையாளர்களுக்கும் ஓர் அறிவித்தல்

ஆனையிறவு தாண்டுவதற்கு பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து உங்கள் விண்ணப்பப் பத்திரங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

(1) லொறி பதிவுப் புத்தகம் அல்லது அதற்குரிய சம்பந்தப்பட்ட ஆவணங்கள்.
(2) லொறி உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை அல்லது அவரது பிரதிநிதியின் அடையாள அட்டை.
(3) லொறியின் காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப் பத்திரம். (மூலப் பிரதிகள்)
(4) சாரதி, கிளீனர் ஆகியோரின் அடையாள அட்டைகள்.

இலக்கம்: 59,
ஹோட்டல் ஞானம்ஸ்
யாழ்ப்பாணம்.

வட பிராந்திய லொறி, டஸ் போக்குவரத்து ஒன்றியச்செயலாளர்
ஆ. மு. இராஜகோபால்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் 65 சதவீதமானோருக்கு உணவு முத்திரை

மட்டக்களப்பு ஜூலை 22
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 3 லட்சத்து 80 ஆயிரம் குடியிருப்பாளர்களில் 2 லட்சத்து 62 ஆயிரம் பேர் இவ்வருடம் உணவு முத்திரை பெறுகிறார்கள். இத்தொகை இம்மாவட்ட சனத்தொகையில் 65 சதவீதமாகும்.

இத்தகவலை மட்டக்களப்பு அரச அதிபர் திரு எம் அந்தோனிமுத்து செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

உணவு முத்திரை பெறுவோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது இம்மாவட்டத்திற்குத் தேவையான உணவு முத்திரைகள்யாவும் பாதுகாப்பாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் கொழும்பிலிருந்து பாதுகாப்பாகக் கொண்டுவரும் பணியை மேற்கொண்ட மாவட்ட உணவுக்கட்டுப்பாட்டதிகாரி, சமூகசேவைப் பணிப்பாளர் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

இப்படி அரச அதிபர் மேலும் கூறினர்.

## மின் விநியோக மீற்றர்களில் குளறுபடி திடீர்சோதனையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23
நல்லூர், மலைவாகம், கொக்குவில் பகுதிகளில் பலர் தம் வீடுகளில் உள்ள மின் மானியில் (மீற்றரில்) மாற்றம் செய்து அதிக மின்சாரத்தை சட்ட விரோதமாக குறைந்த கட்டணத்தில் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தைச் சேர்ந்தமின் ஊழியர்கள் திடீர் பரிசோதனையை மேற்கொண்டபோதே இது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களை இல்லங்களுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதுடன் தண்டமும் அறவிடப்பட்டது. (உ-5)

## கென்யா பயணமானர்

யாழ்ப்பாணம், ஜூலை 22
டகுத்தித்துறை பிரசைகள் குழுவின் தலைவர் பேராசிரியர் வி. கணேசலிங்கம் கென்யா பயணமானர்.

அங்கு நடைபெறும் வேம்பு பற்றிய மூன்றுவது சர்வதேச கருத்தரங்கில் அவர் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பார்.

தாவரங்களைத் தாக்கும் பூச்சிகளின் கட்டுப்பாட்டுக்குத் தாவரப் பொருட்களைப் பாவித்தல் வழமையான பூச்சிகொல்லிகளுக்குப் பதிலாக தாவரங்களையும் பயன்படுத்தல் ஆகியன அவரால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளாகும். (ஒ)

## மக்கள் முகம்

### சட்டநாதர் ஆலய வழிபடுவோர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
நல்லூர் சட்டநாதர் ஆலய வழிபடுவோர் சங்க புதிய ஆண்டு உத்தியோகத்தர்கள் வருமாறு:—

போஷகர்: பண்டிதர் க இராசையா தலைவர்: திரு வ பரமசிவம் உபதலைவர்கள்: திரு ஆ. க செல்வரத்தினம் திரு. சி. ஜெயபதி செயலாளர்: திரு பொ. தி. மார்க்கண்டு உபசெயலாளர்: திரு. க. சந்திரகுமார் பொருளாளர்: திரு ஆ. வாமதேவன் உபபொருளாளர் திரு. வீ யோகரத்தினம் கணக்குப் பரிசோதகர்: திரு வே. குமாரசாமி, திரு கு. கிட்ணர். (இ-9)

### பிரசைகள் குழு உறுப்பினர்கள்

காரைநகர், ஜூலை 22
செம்பியன்பற்று முள்ளி பற்று இராமசபை குறிச்சுட்டப்பட்ட வடமாராட்சி பிரசைகள் குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கொ. வி அரவிந்லான்; உபதலைவர் திரு. ந. தர்மகுலசிங்கம் செயலாளர்: திரு க ஜெபவீரசிங்கம் பொருளாளர்: திரு. கு. நாகேஸ்தரன்

நிர்வாக சபை உறுப்பினர்கள் திரு பா. ரே. மதுரநாயகம் திரு வெ இராசநாயகம் திரு வீ எஸ் நந்தசாமி திரு ந திருபாலசிங்கம் திரு க சறுவல்தாபி (இ-70-118)

## தமிழர் இறந்து கொண்டிருப்பதை யாழ். குடாநாட்டிற்கு ஒரு தரம் விஜயம் செய்து பாருங்கள்

### பற்றிக்ஸ் பழைய மாணவர் சங்கம் அறிக்கை

யாழ் பாணம், ஜூலை 22
உண்மை கசப்பானது யாழ் குடாநாட்டுக்கு விஜயம்செய்துஅப்பாவித் தமிழ்மக்கள் எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள்; இறந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதைப் பாருங்கள்

இப்படி கொழும்பில் உள்ள சுதந்திர கத்தோலிக்க அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விடுத்துள்ள பதிலில் கூறியுள்ளது

கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை நிகழ்த்திய உரையைக் கண்டித்து கொழும்பு சுதந்திர கத்தோலிக்க அமைப்பைச் சேர்ந்த திரு ஜெரிடி. சில்வோ, திரு வால்டர் ரூபசிங்க ஆகியோர் பகிரங்க கடிதங்கள் எழுதியுள்ளனர்

இக்கடிதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் வண. பிதா ஜி. ஏ பிரான்சிஸ் ஜோசப், சிரேஷ்ட உப தலைவர் டாக்டர். ஜே பி பிலிப்ஸ், உப தலைவர்கள் பிதா லூயி பொன்னையா, திரு. ஏ வி ஏ ஜே. விஜயரத்தினம், பொதுச் செயலாளர் திரு ஜி. ஆர். ராஜசிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கை வருமாறு:

ஆயரின் பேச்சைத் தாக்கும் போக்கில் நீங்கள் விடுத்த பகிரங்கக் கடிதத்தைக் கண்டனம் செய்கிறோம்.

உள்ளத்தின் ஆழமற்ற தன்மையையும் உண்மையைக் குறைவுபடுத்திப் பேச எவ்வளவுக்கு தரம் இறங்குவீர்கள் என்பதையும் உங்கள் பகிரங்கக் கடிதங்கள் எடுத்துக்காட்டுகின்றன

அப்பாவி மக்களை எவர் கொலைசெய்தாலும் நாம் கண்டித்தே வருகிறோம். எதிர்காலத்திலும் அப்படியே செய்வோம். எமது பகுதியில் தினமும் தேவையற்ற முறையில் கொலைகள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டு மக்களுக்கு உண்மை தெரியாதபடி மறைக்கும் அரசின் செயலுக்கு உதவும் உங்களுக்கு இவை ஏற்றுக் கொள்ள முடியாதவையாக இருக்கலாம்.

வடபகுதியில் இடம் பெறும் உண்மைச் சம்பவங்களை கொழும்புப் பத்திரிகைகள், அரசு தொடர்பு சாதனங்கள் வெளியிடுவது இல்லை திரித்துத்தான் பிரசுரிக்கின்றன. இந்த சூழ்நிலைதான் தாற்றும் பகிரங்கக் கடிதத்தை எழுத உங்களுக்கு இடமளித்தது.

கொழும்பில் தமிழர் அமைதியாக வாழ்வதை வந்து பார்க்கும் படி ஆயரை அழைத்திருக்கிறீர்கள். பாதுகாப்பு அற்ற தமிழர்கள் யாழ் குடாநாட்டில் கொல்லப்படுவதை வந்து பார்க்கும் படி உங்களை அழைக்கின்றோம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அத்தியாவசிய சேவைகளை நடத்த தேவையற்ற அபாயங்களை அரசு பொறுப்பேற்றுள்ளது என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள் உங்களின் இந்தக் கூற்று அரசு வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஏதோ சலுகைகளைச் செய்கிறது; தனது கடமையை அல்ல என்ற ரீதியில் நினைப்பூட்டுவதாகத் தோன்றுகிறது

ஆயரின் பேச்சு உண்மைக்குப் புறம்பானது என்று கூறும் உங்களின் கடிதம்தான் முழு உண்மைக்குப் புறம்பானதாகும்.

மக்களைக் கொல்வதை, உடைமைகளை அழிப்பதில் தான் அரச படைகள் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் தமிழர்களை அழிப்பதில் அரசபடைகள் ஈடுபட்டுள்ளன என்ற முடிவுக்கு நமது மக்கள் வருவதில் என்ன தவறு உண்டு?

இப்படி அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது

'கொலைகாரர்'களில் இருந்து சென் பற்றிக்ஸ் ஒதுங்கிக் கொள்கிறது என்ற தலைப்பில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கின்றார்.

யாழ் ஆயரின் பரிசளிப்பு உரை எதிர்பார்த்த ஒரு விழிப்புணர்வை தெற்கில் ஏற்படுத்தியுள்ளது நீதி உண்மையை ஏற்றுக்கொள்ள சக்தியற்றவர் ஆயரின் குணவியல்பைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்—இப்படிக் கல்லூரி அதிபர் அப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளார். (உ-எ)

### பிரதான உழைப்பாளியை இழந்த 10 குடும்பங்களுக்கு மாதாந்தம் நிதி உதவி

#### மட்டக்களப்பு அரச அதிபர் ஏற்பாடு

மட்டக்களப்பு, ஜூலை 22
மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்கால சம்பவங்களினுல் பிரதான உழைப்பாளியை இழந்த குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 குடும்பங்கள் என்ற அடிப்படையில் தலா ஆயிரம் ரூபாய் உதவி வழங்கப்படுகிறது.

இத்தகவலை மட்டக்களப்பு அரச அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில் —

பத்திரிகை நிறுவனமொன்று மாதந்தம் 10 ஆயிரம் ரூபாய் இத்திட்டத்திற்கு உதவி வருகிறது இதுவரை அந்நிறுவனம் வழங்கிய 30 ஆயிரம் ரூபாய் 30 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

இந்து இளைஞர் மன்றம் மண்முனை மேற்கு வாசிகள் ஐயரின் குடும்பத்திற்கு உதவ 5 ஆயிரம் ரூபாய் வழங்க முன்வந்துள்ளது என்றார் (உ-21)

### சந்தேகநபர்களைப் பார்ப்பதற்கு பூஸா செல்வோருக்கு நிதி உதவி நிறுத்தம்

மட்டக்களப்புஜூலை 22
பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை பார்க்கச் செல்லும் வறிய குடும்பங்களுக்கு மட்டக்களப்புக் கச்சேரியினுல் வழங்கப்பட்ட மானிய உதவி நிதியின்மையினுல் தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

பூஸாவிலுள்ள சந்தேக நபரை பார்வையிடச் செல்லும் வறிய பெற்றோருக்கு போக்குவரத்து செலவிற்காக தலா 150 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது

வை எம் சி ஏ. செடெக், ரோட்டரி, லயன்ஸ், ஐ சி எஸ் ஆகிய அமைப்புக்களின் உதவியினுல் இம்மானியத்தை சமூக சேவை பிரிவு வழங்கி வந்தது.

நிதி முடிவடைந்ததால் 60 விண்ணப்பங்கள் இதுவரை வழங்கப்படாமல் தேங்கியிருக்கின்றன. நலன்விரும்பிகள், பொது அமைப்புகளிடமிருந்து இப்பணி தொடர உதவிகள் கோருவதாக அரச அதிபர் திரு. எம் அந்தோனிமுத்து தெரிவிக்கிறர். (உ-21)

---


வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

---

### தவறிவிட்டது

ஆறுமுகம் அரியபரநிதியாகிய எனது 520631437 V இலக்க அடையாள அட்டை கடந்த 15-7-86ல் யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறை செல்லும் 751 நம்பர் பாதையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் "சகிகலாக்" வல்வெட்டித்துறை என்ற விலாசத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ மேற்படி விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

## 2வது நினைவஞ்சலி



து. பஞ்சலிங்கம்
(மனோ மாஸ்டர்)

தோற்றம்: 09-04-1956
அழிப்பு: 22-07-1984

ஓ என் தோழர்களே! எல்லோரும்
விழித்தெழுங்கள்
சிங்களச் சிறைவுகளில் விடுதலை தேடப்
புறப்பட்டவர்களே!
சிந்தித்துப் பாருங்கள் சிறிமிடம்
என்றவுன்
உன்னத் தெருவினிலே சவமாக்கி
ஓடி ஒளித்தார்கள் வீரமைந்தர்கள்

மக்களே; மக்களை மட்டுமே நீ நேசித்ததனால்
உரிமை கோராது உயிரைப் பறித்தனர்.
மண்ணை மட்டும் நேசிக்கும் அந்த
மகத்தான வீரர்கள்

பாட்டாளிகளின் சரித்திரத்தை பகல்
இரவாய்
சொல்லி வந்தாய் என்பதனால்
முன் எச்சரிக்கையாய் முதலாளித்துவ
சர்வாதிகாரம்
வீதியிலே மீண்டும் தமிழ் இரத்தத்தை
சிதறவைத்தது

வேலியே பயிரை மேய்வதும் உண்டு
மீன்களுக்கு மீன்களே பலியாவதும் உண்டு
இங்கே விடுதலைப் பூக்களின் குருதியால்
தேசமே நனைகிறது
மக்களே! விடுதலையின் பேருக்கு
இவன் இரத்தமும் அஞ்சலியா?

குடும்பத்தவர்,
ஊர்மக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

கொம்மந்தறை.
வல்வெட்டித்துறை.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### மன உறுதி கொண்ட காந்தீயவாதி நேசையா

#### துணைவேந்தர் புகழுரை

யாழ்ப்பாணம்,ஜூலை 22
மன உறுதியுடனும், தன்னம்பிக்கையுடனும் காந்தியத்தின் வழியில் நடப்பவர் பேராசிரியர் திரு. நேசையா கடந்த பலவாருடங்களாக அவர் காந்திய உணர்வுடன் செயற்பட்டு வருகிருர்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை பேராசிரியர் கு நேசையாவுக்கு அறவழிப் போராட்டக் குழுவின் சார்பில் 'அறநெறிக் காவலர்' என்ற பட்டத்தினை வழங்கித், தலைமையுரையாற்றிய யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறினர். இவ்வைபவம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது

துணைவேந்தர் திரு. வித்தியானந்தன் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது;

1956-ம் ஆண்டு இனக் கலவரம் நடந்தபோது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக இருந்த பேராசிரியர் கு. நேசையா அவர்கள் சிங்களச் சிநேகிதர்களால் அளிக்கப்பட்ட பாதுகாப்பான இடத்தினை ஏற்றுக்கொள்ளாது தாம் வசித்த இடத்திலேயே இருந்து இடம்மாறாது வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகளையும் உரத்த தொனியில் போட்டுக் கேட்டவண்ணம் இருந்தார். அந்தச் சம்பவம் இன்னும் என்மனத்தைவிட்டு அகலாதிருக்கின்றது.

தந்தை செல்வா இறப்பதற்கு முன்னர் அவருடன் சேர்ந்தும் அவரின் இறப்புக்குப் பின்னர் அவர்வழி நின்றும் உழைத்த உத்தமருக்கு எனது கையால் பட்டமளிப்புப் பத்திரம் வழங்குவதை மிகுந்த பெருமையாக நினைக்கின்றேன் என்று— குறிப்பிட்டார்.

அறவழிப் போராட்டக் குழுவின் சார்பில் பனைமரத்தினுல் செய்யப்பட்ட கைத்தடியும், பனையோலைத் தட்டத்துடன் பனையோலை ஏடும் வழங்கப்பட்டன. பொன்னுடையும் போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் கே சிவஞானசுந்தரம் (நந்தி) உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

இவ்வைபவத்தைத் தொடர்ந்து அறவழிப் போராட்டக் குழுவினுல் நடத்தப்படும் சிறுவர் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட சிறுவர் நிகழ்ச்சிப் போட்டியில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடத்தப்பட்டது. (உ-119)

### கிளிநொச்சி அகதிகளுக்கு உதவுமாறு மீண்டும் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 22
கிளிநொச்சி அகதிகளுக்கு சகல பொது நிறுவனங்களும் முன்வந்து உதவ வேண்டும்.

இப்படி கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக் குழு மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது

கடந்த ஜூன் மாதம் 4 ஆம் திகதி முதல் இடம்பெற்ற ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் உடைமைகளை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

காந்தி நிலையம், கோணாவில், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், இராமநாதபுரம், முரசுமோட்டை, நவஜீவனம் ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களில் கணேசபுரம், திருநகர், கனகபுரம், ஜெயந்திநகர், பரவிப் பாஞ்சான், கிளிநொச்சி ஆகிய பகுதி மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்

இவர்களைக் காப்பாற்றும் பணிக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், சற்றர்டே றிவியு கிதாபனம்,றெட்பாறு பிள்ளைகள் நிதியம், யாழ் வைத்தியர் சங்கம் ஆகியன உதவுகின்றன

காந்தி நிலையம், கோணாவில் ஆகிய முகாம்களில் உள்ள சுமார் 700 அகதிகளுக்கு சர்வோதய இயக்கம், யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை ஆகியன உதவுகின்றன ஏனைய முகாம்களை உள்ளூர் ஸ்தாபனங்களும் மனித முன்னேற்ற நிலையமும் பராமரித்து வருகின்றன.

இப்படி கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக் குழு தெரிவித்துள்ளது. (உ-எ)

### குழந்தைகளுக்கு புனர்வாழ்வு

கொழும்பு, ஜூலை 22
மட்டக்களப்பு,வாகரை அகதி முகாமில் உள்ள 15 தமிழ்க் குழந்தைகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் பணிகளில் கனிஸ் நாட்டு சமூக நிறுவனமான 'டெரிடிஸ் ஹோம்ஸ்' ஈடுபட்டுள்ளது.

புனர்வாழ்வு அளிப்பதற்காக ஏற்கனவே 6 தமிழ்க் குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டுவிட்டன. (உ-எ)

### 240 வீடுகள் புனரமைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 22
கிழக்கு மாகாண சமூக மோதலின்போது பெரும் பாதிப்பு அடைந்த காரைதிவு கிராமத்தின் புனரமைப்பு அலுவல்களில் முதற்கட்டம் தற்போது பூர்த்தியடைந்துள்ளது

இக்கிராமத்தில் இக்கலவரத்தால் 762 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவற்றில் 240 வீடுகள் சமூக சேவை அமைப்புகளின் உதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன

இவ்வீடுகள் கையளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது. (உ-21)

### நாடோடிப் பாடல்கள் தொகுக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 22
ஈழத்து நாடோடிக் கதைகளையும், தொழில் நிலைப்பாடலையும் உழைப்போர் பாடல்களையும் தொகுத்து வெளியிடுவதற்கு 'ஆய்வு நிறுவனம் முயற்சி செய்து வருகிறது

இது சம்பந்தமாக 'ஆய்வு' நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

முன்னோர் காலந்தொட்டு பரம்பரை பரம்பரையாக வாய் வழியாய் பல்வேறு கிராமியக் கதைகளும் தொழிலாளர் பாடல்களும் வழங்கி வருகின்றன.

அவ்வாறான கதைகளையும் உழைப்போர் பாடல்களையும் அறிந்தவர்கள் அவற்றை எழுத்துமூலம் 'ஆய்வு' நிறுவனத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது (உ-5)

### குழந்தைக் கவிதைகள்; குறைகளைகளைய முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 22
ஆசிரியர்கள், குழந்தைக் கவிஞர்கள், மொழியியல் அறிஞர்கள், தமிழ் ஆய்வாளர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து குழந்தைக் கவிதை செயலமர்வு ஒன்றை உருவாக்கியுள்ளது நல்லூர் கல்வியல் நிலையம்.

யாழ் பல்கலைக் கழகத் தமிழ்துறைப் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் இச்செயலமர்வின் நெறியாளராக உள்ளார்.

இதுவரை வெளிவந்த குழந்தைக் கவிதைகளை ஒருமுகமாக நோக்கி ஆராய்ந்து வெளியிடாத காரணத்தால் நல்ல குழந்தைக் கவிதைகள் இல்லையென்ற குறை நிலவுகிறது இக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் இச்செயலமர்வு செயற்படுகிறது.

—இவ்வாறு இச்செயலமர்வின் திட்டம் பற்றி விளக்கிக் கூறப்பட்டது. (உ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஒருவன் செய்யக்கூடிய தீய செயல்களில் எல்லாம் முற்றிலும் தீயதும், சற்றும் மன்னிக்க முடியாததும் களவு ஒன்றே.

— ரஸ்கின்


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை, கஸ்தூரியார் நிலைய வீதி, யாழ்ப்பாணம் — தொலைபேசி 24805, 22073 — 22-07-86 — த.பெ 23


## தனியொருவனுக்கு உணவில்லை எனில்....

"தனியொருவனுக்குணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" — இது உலக மகாகவி பாரதியின் புரட்சிக் கருத்து; கொள்கை. புதியதோர் உலகம் அமைக்க அவர் அவசியம் எனக் கருதியது.

ஆம், உலகில் வாழும் ஒருவன் தானும் பட்டினியால் வாடும் நிலை இருந்தால், அந்த உலகம் வேண்டாம் அதனை அழிக்க வேண்டும். உலக மக்கள் அனைவரும் வயிறார உண்டு வாழக்கூடிய ஒரு புதிய உலகைப் படைக்க வேண்டும் அதுவே பாரதியின் ஆசை.

யாரும் பட்டினி இருத்தல் ஆகாது என்று முக்கால் நூற்றாண்டுக்கு முன்னரே பாரதி விரும்பினான் ஆனால் இத்தனை வருடங்கள் கழிந்தும் எத்தனையோ நாடுகளைச் சேர்ந்த லட்சக் கணக்கான மக்கள் ஒருநேர உணவுக்கும் வழியின்றிப் பட்டினி கிடக்கிறார்கள்.

எத்தியோப்பியா போன்ற ஆபிரிக்க நாடுகளில், ஆசிய நாடுகளில் மற்றும் அபிவிருத்தி குன்றிய மூன்றாம் உலக நாடுகளில் மக்கள் தினம் தினம் பட்டினியோடு காலத்தைக் கடத்துகிறார்கள்

புஷ்டியுடன் வளர வேண்டிய பாலகர்கள் கூட தாய்ப்பாலுக்கும் வழியின்றி குடல் சுருண்டு வாடுகிறார்கள்; வதங்குகிறார்கள் போஷாக்கான உணவு கிடைக்காமல் எலும்பும் தோலுமாய் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஏராளம்

நிலத்தில் மேடும் பள்ளமும் போல, நாட்டுக்கு நாடு இயற்கை வளத்திலும் வேறுபாடு. அதனால் உணவு உற்பத்தியிலும் பிராந்தியத்துக்குப் பிராந்தியம், தேசத்துக்குத் தேசம் ஏற்றத் தாழ்வு

அதனால் வளம் நிறைந்த நாடுகளில். வளர்ச்சி அடைந்த நாடுகளில் மக்களின் பட்டினி நிலைமை சராசரி மிக மிகக் குறைவு

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் உணவுப் பற்றாக்குறை இன்னும் இல்லாமல் இல்லை. பட்டினி நீங்கிவிட்டதாகவும் கூறமுடியாது.

வளர்ச்சி காணாத, பின்தங்கி நிற்கும் நாடுகளில் உணவுப் பற்றாக்குறை, தட்டுப்பாடு, பட்டினி, பஞ்சம் எல்லாமே தாராளம்

வளம் குறைந்த நாட்டில் பிறந்தவர்கள் என்பதற்காக, உணவு உற்பத்தி குன்றிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக எவரும் பட்டினி கிடக்க வேண்டிய நியதி இல்லை என்பது உலக உணவு உற்பத்திப் புள்ளி விவரங்கள் தரும் தகவலாகும்

உலக நாடுகளில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்கள் உலக மக்கள் எல்லோருக்கும் போதுமானவை. சற்று அதிகமாகவும் உள்ளது.

இதனைப் புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துவதாக யாழ் மாவட்டத்தின் திட்டமிடல் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் கூறியிருக்கிறார் கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்

உணவு உற்பத்தி உலக மக்களின் உணவுத் தேவையை விட அதிகமாக இருந்த போதிலும், அது சரிவரப் பங்கிடப்படவில்லை. அதனால் பல நாடுகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது என்று அவர் எடுத்து விளக்கினார்

மனித குலம் ஒன்றே. உலகமும் ஒன்றே ஆனால் அது நாடுகள் என்ற எல்லைகளால் பிரிக்கப்பட்டதால், மக்களும் பிரிக்கப்பட்டு விட்டார்கள் அதனால் இயற்கை தரும் வளங்கள் சரிசமமாகப் பிரிக்கப்படுவதில்லை.

அந்த நிலை மாற வேண்டும். மனிதன் உயிர் வாழத் தேவையான முதன்மைப் பொருளான உணவினாவது, தேவைக்கு ஏற்ற நியாயமான பங்கீடு அவசியம். ஒருநாட்டில்மேலதிகமும் வீண் விரயமும் இருக்க, அடுத்த நாட்டில் பற்றாக்குறை நிலவுவது விரும்பத்தக்கது அல்ல.

ஐக்கிய நாடுகள் சபை, உலக உணவு ஸ்தாபனம் ஆகிய சர்வதேச நிறுவனங்கள் இவ்விடயத்தில் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

உலக நாடுகளுக்கு இடையே உணவுப் பொருள்களைத் தேவைக்கேற்ற விதத்தில் பங்கிடுவதன் அவசியத்தை எல்லா நாடுகளுக்கும் வலியுறுத்த வேண்டும். அதற்கான திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படுத்த உழைக்க வேண்டும். ஒரு மனிதனாவது பட்டினி கிடக்காமல் வாழ உலகளாவிய உணவுப் பங்கீட்டுத் திட்டம் அவசியமும் அவசரமும் ஆனதாகும்.

# காங்கிரஸ் ஜே பிளவுபட்டது

## ஜெகஜீவனின் மனைவி ஓர் அணிக்குத் தலைவி

புதுடில்லி, ஜூலை 21

அண்மையில் மறைந்த தலைவர் ஜெகஜீவன் ராமினால் உருவாக்கப்பட்ட காங்கிரஸ் (ஜே) கட்சி இரண்டு கட்சிகளாகப் பிரிந்து விட்டது.

ஒருபிரிவிற்கு திருமதி இந்திரமணிதேவி ஜெகஜீவன்ராம் தலைவியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மற்றப் பிரிவுக்கு தற்பொழுது தற்காலிக தலைவராக இருந்து வரும் திரு ஹரிபன் சிங்பரிவா தொடர்ந்து தலைவராக இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சரவையில் தொடர்ந்து 30 ஆண்டு காலம் அங்கம் வகித்த ஜெகஜீவன்ராம் 1977 ஆண்டு இந்திரா காந்தியுடனான தனது அரசியல் உறவுகளை முறித்துக்கொண்டு, ஜனநாயக காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்கியதும், பின்னர் 1980இல் தனது பெயரிலேயே காங்கிரஸ் ஜே (ஜெகஜீவன்ராம் பிரிவு) என ஆரம்பித்திருந்ததும் தெரிந்ததே. (இ-ஒ)

### 300 கோடி மீதம்

ஆண்டுதோறும் 300 கோடி பெறுமானமுள்ள வெளிநாட்டுச் செலவாணியை மீதப்படுத்தும் வகையில் எட்டரை லட்சம் தொன் சமையல் எரிவாயுவை உற்பத்தி செய்ய தமிழக அரசு திட்டமிட்டுள்ளது

## செய்திச் சரம்

**ஒரு லட்சம் வீடுகள்**

நடப்பாண்டில் ஒருலட்சத்து பத்தாயிரம் வீடுகளைக் கட்ட தமிழ்நாடு குடிசைத் தொழில் மாற்று வாரியம் முடிவு செய்துள்ளது.

*

**தலைமச் செயலர்**

தமிழ்நாடு மாநில அரசின் தலைமைச் செயலாளராக திரு. ஏ பத்மநாதன் நியமனம் பெற்றுளார்.

*

**ஒப்பந்தம் செய்தன**

வைத்தியத் துறையில் அபிவிருத்தி அடைவதற்கும், இந்திய ஆயுர்வேத வைத்திய முறையை ரஷ்யாவில் பிரபலப்படுத்துவதற்குமென இந்திய — ரஷ்ய ஒப்பந்தம் கைச்சாத்தானது.

**நேபாளம் சென்றார்**

இந்திய ஜனாதிபதி ஜானி ஜெயில்சிங் ஐந்து நாட்கள் விஜயம் மேற்கொண்டு நேபாளம் சென்றுள்ளார்

*

**அமெரிக்கா சாம்பியன்**

உலக பாஸ்கட்போல் சம்பியனை அமெரிக்கா வெற்றிபெற்றுள்ளது.

*

**வாணிபம் அதிகரிப்பு**

இந்தியாவிற்கும் அல்ஜீரியாவிற்கும் இடையிலான வாணிபம் இந்த ஆண்டு ஐந்து மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*

**எதிர்ப்பு**

மிசோரமிற்கு மாநில அந்தஸ்து அளிப்பதென்ற தீர்மானத்தை பாரதீய ஜனதா கட்சி வன்மையாக எதிர்த்துள்ளது.

*

**காரணம்**

உக்ரெயினில் கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பட்ட செர்னோபில் அணு ஆலை விபத்திற்குஊழியர்களும் நிர்வாகமும் காரணமாகும் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

*

**டாக்காவில் கூட்டம்**

இந்திய—பங்களாதேஷ் கூட்டுப் பொருளாதார கமிஷனின் தொழில் துறை பற்றிய கமிட்டிக் கூட்டம் டாக்காவில் ஆரம்பமானது. (இ-ஒ)

## வெளி உலகில்

## தென் ஆபிரிக்காவுக்கெதிராக உறுதியான நடவடிக்கை வேண்டும்

### பிரிட்டனிடம் இந்தியா கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 22

இன ஒதுக்கலை முடிவுக்குக் கொண்டு வரத் தென் ஆபிரிக்கா மீது உறுதியான நடவடிக்கை எடுப்பதாகப் பிரிட்டிஷ் அரசு உறுதியளிக்க வேண்டும் என இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

எடின்பரோவில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதில்லை என அறிவித்த இந்தியா இந்த வேண்டுகோளையும் வலியுறுத்தியது

சென்ற ஆண்டு அக்டோபரில் பஹாமாஸ் தீவுகளில் நடைபெற்ற காமன்வெல்த் அரசுகளின் மாநாட்டில் தென் ஆபிரிக்கா குறித்த 'நாஸோ' ஒப்பந்தம் ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டதென்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

தென் ஆபிரிக்காவிக்கு எதிராக காமன்வெல்த் நாடுகள் செயல்படுத்த இருக்கும் சில நடவடிக்கைகள்தான் இந்த உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆனால் பிரிட்டிஷ் அரசு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கைகள் ஆக்குறைவான நடவடிக்கைகளைக் கூட அனுசரிப்பதாக இல்லை.

அத்துடன் இனவெறி அரசுக்கு எதிராகத் தடைகள் விதிக்கும் விஷயத்தில் பிரிட்டிஷ் அரசு பிடிவாதப் போக்கைக் கடைப்பிடிப்பது இந்தியாவிற்கு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது—

இப்படி இந்தியா தெரிவித்துள்ளது. (இ-ஒ)

### நிக்கரகுவா ஜனாதிபதி எச்சரிக்கை

மனாகுவா, ஜூலை 22

நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா உதவி அளிப்பதாக அறிவித்த முடிவை ஒரு வாரகாலத்துக்குள் அமெரிக்கா சத்தினுள் வாபஸ் பெற வேண்டும்

நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஓட்டேகா அமெரிக்காவை எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா இந்த வாபஸ் வேண்டுகோளை அறிவிக்கத் தவறின் ஐ.நா பாதுகாப்புச் சபையின் சிறப்புக் கூட்டம் ஒன்றை நடத்துமாறு தான் கோரப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

சான்டனிஸ்டா புரட்சியின் 7ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு பேசினார். (ஒ)

### இறுதித் தீர்வு: கமிஷனிடம் விடக் கோரிக்கை

சண்டிகார், ஜூலை 21

பஞ்சாப்- ஹரியானா மாநிலங்களில் நிலவும் நிலப்பிரச்சினை பற்றிய இறுதித் தீர்வுகள் அனைத்தும் ஒரே ஒரு கமிஷனிடம் விடப்பட வேண்டும்.

பாரதீய ஜனதா கட்சியின் தேசிய நிர்வாகக் குழு இவ்வாறு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இதற்கென புதிய கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும், நீதிபதி தேசாய் கமிஷனின் அலுவல் வரம்புகள் விரிவாக்கப்பட வேண்டும் என்றும், இந்த நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது. (இ-ஒ)

## வித்தாரம்

எங்கே முரளியார், கோயில் பக்கம் போய் வருமாப்போலை. பூவோடும் பொட்டோடும். முருகனிட்டை போய் வாறீரோ?... நல்லது

இப்ப கதிர்காமக் காலம் எல்லே முந்தி எண்டா கதிர்காமம் துடங்கிறதுக்கு ஒரு மாதத்துக்கு முன்னமே யாழ்ப்பாணத்திலை எவ்வளவு அமளி துமளியாய் இருக்கும்!

நேர்த்திக்கடன் வைச்சவை தண்டலுக்கு வருவினம். கால் நடையாய் போறதா நேர்த்தி வைச்சவைநேரகாலத்தோடை துடங்கி விடுவினம். காவடி எடுக்கிறவை எண்டும் தீ மிதிக்கிறவை எண்டும், மொட்டை அடிக்கிறவை எண்டும் எத்தனை ரகமான பக்தர்கள்.

இப்ப கதிர்காம உற்சவம் தொடங்கி விட்டுது எண்டு பேப்பரிலை போட்டாத்தான் சனத்துக்குத் தெரியும் எண்டநிலை. கதிர்காமக் கந்தனை மனதாலைமட்டும் நினைக்கிறதோடை நிறுத்திற கட்டம் வந்திட்டுது

கதிர்காமத் திருவிழா என்ன, கொழும்பிலை நடக்கிற வேல்விழாக் கூட அப்பிடித்தான் ரூபவாஹினியிலை காட்டிறதைப் பார்க்கிறதோடை திருப்திப்பட வேண்டியதுதான்.

மூண்டு வருஷத்துக்கு முந்தின நிலையை யோசிச்சுப்பாக்க காலம் எப்பிடித் திடீர் திடீர் எண்டு மாறுது எண்டது புரியும்

ஆடிவேல் காலம் எண்டால் முந்திக் கொழும்பிலை இருந்த தமிழ் ஆக்கள் கொண்டாட்டமாக ஒதுக்கி வைப்பினம் எப்பிடியும் அந்தச் சொந்தம்; இந்தச் சொந்தம் எண்டு வேல்விழாப்பார்க்க வெண்டு குறைஞ்சது பத்துச் சனமாவது ஒரு வீட்டிலை தங்குமடம்போலும்.

அதாலை கொழும்பிலை இருந்த தமிழ் ஆக்களுக்கு ஜூலை- ஓகஸ்ட் மாதங்களிலை பட்ஜெட்டுகள் பெருக்கிறது கண்டு

இப்ப கொழும்பிலை தமிழ்ச்சனமும் இல்லை; வேல்விழாவுக்குப் போகவும் நினைக்கவும் மாட்டினம்.

அவசர அலுவலாய் கொழும்புக்குப் போகவேண்டும் டஸ் போக்குவரத்துக்கடத் தடைப்பட்டு நேற்று முந்த நாள்தான் தொடங்கிச்சு ஆனைபிறவுக்கு அப்பாலை பயணம் செய்கிறதெண்டா அது பெரிய சாகசம் மட்டுமில்லை; உயிர்ப் பணயமும் நிறைஞ்சதாய்ப் போச்சு.

1983 வேல்விழாக் கடைசியிலை தான் வேல கொழும்பு நகர், தமிழர் கொலைக்களமாக மாறினது நானெக்குத்தானே 'கறுப்பு ஜூலை'யின்ரை முண்டாவது ஆண்டுத் தினம் எத்தினை தமிழர் துடிக்கத் துடிக்க அந்த மூண்டு நாளிலையும் கொலைப்பட்டினம்? சிறைச்சாலையில் இருந்த 53 பேரைக்கூட விட்டு வைக்க அந்த இரத்த வெறியருக்கு மனம்இடம் தரவில்லை.

அந்தக் கொலைப் படலம் இன்னமும் தொடருது. இப்ப இப்ப உச்சக் கட்டத்துக்கு வந்து விட்டுது.

கொழும்பிலை, தென்னிலங்கையிலை மட்டுமில்லை தமிழர் தற சொந்த மண்ணே இப்ப அவையின்ரை கொலைக்களமாய்ப்போச்சு. அப்பாவி மக்களை எல்லாம் சுட்டுப்போட்டு தீவிரவாதிகள் கணக்கிலை போட்டுவிடுவினம்.

ஹெலி எண்டும், பொம்பர் எண்டும், பீரங்கி கப்பல் எண்டும் மேலும் வந்து குவியுதுகள் தமிழ் மண் முழுவதையும் முழு அளவிலை பரவலாகக் கொலைக்களமாக்கப்போகுமோ ஆருக்குத் தெரியும்!

முன் எப்போதும் இல்லாதவாறு

## கூட்டுறவுத்துறையின் அவசியம் உணரப்பட்டுள்ளது

### மேலதிக அரச அதிபர் உரை

உடுவில், ஜூலை 22

"கடன் தொல்லைகளிலிருந்தும் — வறுமையிலிருந்தும் மக்களைக் காப்பாற்றும் நோக்குடன் 1911 ஆம் ஆண்டு இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்கம் இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் உணவுப் பங்கிடு செய்யும் வேலையை துரிதமாக செய்ய உதவியது. முன்னெப் பொழுதையும் விட எமது மக்கள் இப்போது கூட்டுறவுத்துறையின் அவசியத்தை உணர்ந்துள்ளனர்

யாழ் மேலதிக அரச அதிபர் திரு. கே. இராமநாதர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உப மொத்த விற்பனை நிலையத்தை உடுவிலில் திறந்து வைத்து திரு. இராமநாதர் உரையாற்றினார்

அவர் மேலும் பேசுகையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை மக்களிடையே பங்கீடு செய்யும் உயர்ந்த பணியைச் செய்யும் கூட்டுறவுத் துறையை மேலும் அபிவிருத்தி செய்ய மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது"

என்றார்,

சங்கத் தலைவர் திரு சி. குமாரவேல் தலைமையுரையாற்றுகையில் "பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் மாத்திரம் கூட்டுறவுச் சங்கத்தை நாடி ஓடி வருவதை விடுத்து பொருள்கள் தாராளமாக கிடைக்கும் காலத்திலும் மக்கள் கூட்டுறவுச் சங்கங்களை நாட வேண்டும் என்றார்.

யாழ் உணவு கட்டுப்பாட்டதிகாரி திரு. பற்குணம் கூறுகையில் "மணல் மூட்டைகள் போட்டு தமிழையும் தமிழர்களையும் இளைஞர்கள் காப்பாற்ற முனைகிறார்கள் கூட்டுறவுச் சங்கங்களின் அரிசி-மா-மக்களை பட்டினியிலிருந்து காப்பாற்றுகின்றன என்றார்.

யாழ் மாவட்ட அபி. சபை கணக்காளர் திரு இராஜேந்திரன், தேசிய கூட்டுறவுச் சங்க தலைவர் திரு எஸ். சிவமகாராஜா, ஆசிரியர் திரு சிராஜ சிங்கம், கன்னாகம் வர்த்தக சங்கத் தலைவர் திரு. எஸ். சதாருவம், சமாதான நீதிவான் ந. சின்னத்துறை, ஆசிரியர் தில்லைநாதன், திரு பூதத்தம்பி உட்பட பலர் விழாவில் உரையாற்றினர். (இ-27)

## அமைதியான முறையில் மாவை ஆலய உற்சவம்

காங்கேசன்துறை, ஜூலை 22

மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் அமைதியான முறையில் நடைபெற்று வருகிறது.

கடந்த 13ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான உற்சவம் தினமும் பகலில் 12 மணிக்கு முன்பும், இரவு 7 மணிக்கு முன்பும் பூர்த்தியடைந்து வருகிறது

உற்சவங்களில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்கிறார்கள்.

வழமையை விட இம்முறை ஏராளமான கடைகள் அமைக்கப்படுள்ளன. உள்ளூர் பொருள்கள் கூடுதலாக விற்பனையாகின்றன; பனம் பொருள்களும் விற்பனையாகின்றன.

பக்தர்களின் நலன் கருதி விசேட ஏற்பாடுகளை மாவை ஆதீனகர்த்தா சு. து. ஷண்முகநாதக் குருக்கள் மேற்கொண்டுள்ளார்

கோபுர வாசல்வீதியை விரைவாக பூர்த்தி செய்வதில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தெல்லிப்பழை வாது காப்பு சேவையினர் 24 மணி நேரமும் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்து வருகிறார்கள்.

அமைதியான முறையிலும் ஆடம்பரமற்ற முறையிலும் உற்சவத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுள்ளன. (உ-68)

## வாசகர் திருமுகம்

### சட்ட விரோத மின் இணைப்பு

சட்டவிரோத மின் இணைப்புத் துண்டிக்கச் சென்றோர் தாக்கப்பட்டனர் — இத்தலைப்பில் 2 7. 86 உதயனில் வெளிவந்த செய்திபற்றிப் பின்வரும் விளக்க—விபரங்களைத் தர விரும்புகிறேன்:

● ஏனையவரைத் திருத்தும் முன்னர் நம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும் இதுதான் உலக நீதி.

தங்கள் கிராமத்தில் உள்ள சட்டவிரோத மின் இணைப்புக்களை அகற்றட்டும்; ஏனையோர் சட்டவிரோத மின்பாவனையைத் தாமாகவே துண்டித்துவிடுவார்கள்.

● பின்னர் நடந்த சம்பவம் ஒன்றில் மினிபஸ் சாரதி ஒருவர் கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்டார் புனித இயக்கங்கள் தலையிட்டால் சம்பந்தப்பட்டவர்கள் தாக்கப்பட்ட சாரதியிடமும் தனியார் மினிபஸ் சேவைச் சங்கத்திடமும் மன்னிப்புக் கோரினர்.

● தாக்குண்ட மினிபஸ் சாரதி அரசாங்க ஆஸ்பத்திரியிலும் தனியார் ஆஸ்பத்திரியிலுமாகச் சுமார் பத்து நாட்கள் சிகிச்சை பெற்றிருக்கிறார்.

● தாக்குண்ட பஸ் சாரதிக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக சம்பவ தினம் சக ஊழியர்களும், பஸ் உரிமையாளர்களும் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த மறுத்தனர்.

"விளக்கவிரும்பி"

பெரியவிளான்.

## சமய சந்நிதிகளில்

### இலட்சார்ச்சனை விழா

சாவகச்சேரி ஜூலை 22

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான இலட்சார்ச்சனை விழா இம்மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று 7. 8. 86. வியாழக்கிழமையுடன் நிறைபெறும்

11 ஆவது நாளாகிய வெள்ளிக்கிழமை ஆடிப் பூரத்தன்று காலை 8-30 மணிக்கு அஷ்டோத்தர (108) சங்காபிஷேகமும் பிற்பகல் 108 தீப பூஜையும் விசேஷ உற்சவமும் நிகழ இருக்கின்றன

விழாக்கிரியைகளை பிரதிஷ்டா சித்தகர், சிவஞானசாகரம் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்களும் சிவஸ்ரீ க பரராசசேகரக் குருக்களும் இணைந்து நடத்துவார்கள்.

ஆடிப்பூரத்தன்று அபிராமி அந்தாதி ஓதல், பஜனை, அருளுரைகள் முதலான நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றன. (இ-31)

### அச்சுவேலியில் கதிர்காமவேல் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

அச்சுவேலி வலலாய்ப் பிள்ளையார் கோவிலில் கதிர்காமவேல் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். பகல் விசேஷ அபிஷேகமும் நடைபெறும்.

தேவஸ்தான பிரதம குரு சிவாசார்யமணி பிரம்மஸ்ரீ க. பாஸ்கரக் குருக்கள் திருவிழாவை நடத்தி வைப்பார்.

விசேஷ மேளக்கச்சேரியும் இடம்பெறும். (இ-ஏ)

தின்னவேலி

## வடமாகாண பாடசாலைகளில் தவணை முடிவின் போது பொதுப் பரீட்சை

காங்கேசன்துறை, ஜூலை 22

வடமாகாண பாடசாலைகளில் 2ஆம் தவணை முடிவில்பொதுப்பரீட்சை முதற்றடவையாக நடத்தப்படவிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 3ஆம் தவணை முடிவில் தான் பொதுப்பரீட்சை நடத்தப்படுவது வழக்கம்.

யாழ். கல்வித் திணைக்களம் எடுத்த முயற்சியின் பலனாக வருடாவருடம் 3 தவணைகளின்முடிவிலும் பொதுப்பரீட்சை நடத்தப்பட விருக்கிறது.

முதல் தடவையாக 2ஆம் தவணைப்பரீட்சை அடுத்தவாரம் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இதற்கென விசேஷ குழு ஒன்றை நியமித்துள்ளார். (இ-68)

## பொய்யாமொழி



குறள்:

அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.

பொருள்:

ஒருவன் தவறான நெறியில் சென்று தீய செயல் செய்யாது இருப்பானானால் அவன் கேடு இல்லாதவன் என்று அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPUTER PROGRAMMING
and
DATA PROCESSING COURSE
BASIC LANGUAGE
6 MONTHS
Commencement 27-7-86
Fees: 1500/-
Cantabia Institute
21, Main Street, Jaffna.
T'Phone 24201

# உதயன்

22 07 1986 செவ்வாய்க்கிழமை

Radio & T V. Engineering Course
6 Months - Week Ends
Lecturer:- Mr. E. KANAPATHIPILLAI
Fees; 250/- per Month
For Further Details:
Cantabia Institute
21, Main Street, Jaffna
T Phone: 2420

# தமிழர் தாயகம்; அதன் அடிப்படையில் மட்டுமே தீர்வுக்கு வழி

## இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களை ஒரு தேசியஇனம் என்றும் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்றும் எமது சங்கம் உறுதியாக ஏற்றுள்ளது.

எனவே இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு முன்வைக்கப்படும் எந்த ஒரு சமாதானத் தீர்வும் வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக — தாயகமாக — ஏற்றுக் கொள்வதன் அடிப்படையிலேயே முன்வைக்கப்பட வேண்டும்.

கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சங்க வடபிரதேசக் கிளையான வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் மாகாண சபை பற்றிய மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான மேலும் சில தீர்மானங்கள் அங்கு நிறைவேற்றப்பட்டன. அவையாவன:-

தற்பொழுது ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் மேற்கூறியவற்றை ஏற்கவில்லை என்பது வெளிப்படை; அவை தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கியுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

சுதந்திரத்தின் பின் கடந்த 39 ஆண்டுகளாக மக்களின் உரிமைகள் நாடாளுமன்றச் சட்டங்களாலும் அரசியல் யாப்புகளினாலும் பதவிக்கு வந்த அனைத்து அரசாங்கங்களினாலும் தொடர்ந்து பறிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தவறிய இந்த அரசாங்கங்கள் பொதுமக்களுக்கு எதிராகப் பல்வேறு அடக்குமுறை நடவடிக்கைகளை அமெரிக்க மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளுடன் இணைந்து மேற்கொண்டு வந்துள்ளன.

இன்று இலங்கையில் இனவாத முதலாளித்துவ அரசாங்கம் இராணுவத்தின் உதவியுடன் அரச இயந்திர ஒடுக்குமுறைக் கூடாக — எதேச்சதிகார முறையிலே — இலங்கையை ஆட்சி செய்து வருகின்றது.

ஆயுதப் படைகளின் உதவியுடன் ஆட்சியாளர்கள் வடக்கு — கிழக்கில் உள்ள அப்பாவிக் குடிமக்களை தொடர்ச்சியாகக் கொன்று குவித்து வருகின்றனர்.

தற்பொழுதுள்ள சூழ்நிலையில் இன்று முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தீர்விற்கான குறைந்தளவு அடிப்படை அம்சங்களைக்கூட உள்ளடக்கவில்லையாதலால் நாம் இந்த ஆலோசனைகளை நிராகரிக்கிறோம். (உ-10)

# யாழ் மக்களுக்கு மீனவர் கணபதி நன்றி

யாழ்ப்பாணம் ஜூலை 22

யாழ்ப்பாண மக்களுக்கு நன்றி சொல்கிறார் இந்திய மீனவர் கணபதி:

கடந்த முதலாம் திகதி இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி எனது சக மீனவர்களையும் கடலில் பறிகொடுத்துவிட்டு கரை ஒதுங்கிய என்னை உடனடியாகக் கவனித்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்த்தவர் புங்குடுதீவு மக்களும் விடுதலைப் புலிகளும்.

யாழ் ஆஸ்பத்திரியில் என்னை சேர்த்த போது என்னை தமது சகோதரர்கள் போல் உரிய முறையில் உரிய நேரத்தில் உள்ளபடி கவனித்தனர் யாழ் ஆஸ்பத்திரி வைத்தியர்களும் வைத்தியர்களும் இதேவேளை கவலையுடன் இருந்த என்னை தினமும் வந்து பார்த்து எனக்கு ஆறுதல் கூறியும் உணவுகள், உடுபுடவைகள் தந்தும் நல்ல முறையில் கவனித்த குருநகர் கடற்றொழிலாளர் சமாசத்திற்கும் ஏனைய யாழ் மக்களுக்கும் நான் நன்கு கடமைப்பட்டுள்ளதுடன் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

# வட்டக்கச்சியில் வழிமறிப்புப் போர்

### ஒரே இரவில் ஆறு வீடுகளில் கொள்ளை

கிளிநொச்சி, ஜூலை 22

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் கடந்த 15ஆம் திகதி ஒரே இரவில் ஆறு வீடுகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து வட்டக்கச்சியில் ஞாயிற்றுக்கிழமை முதல் வழிமறிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி — வட்டக்கச்சி பிரதான வீதியில் உள்ள ஆறுமுகம் வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வழிமறிப்புப் போராட்டத்தினால் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மக்கள் நடந்துசெல்லவும் விடாது தடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கொள்ளைகள் குறித்த திட்டமான ஒரு முடிவு கிட்டும் வரை இப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் எனவும் —

இயக்கங்கள் இக்கொள்ளையர்களை இனம் கண்டு தீர்ப்பு வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-76)

## தாழப் பறக்கும் ஹெலிக்கொப்டர்

கடந்த சில தினங்களாக ஹெலிக்கொப்டர்கள் ஓரளவு தாழப் பறப்பதை யாழ் நகரில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. (இ-5)

## ராக்கிங்---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

யும்— இதனால் மாணவர்கள் உடலியல், உளவியல் ரீதியாக மோசமாக பாதிக்கப்படுவது பற்றியும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது

# இந்திய உயர். . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வதே நல்லது என்ற தொனியில் பலாலிமுகாம் அதிகாரிகள் தெரிவித்தனராம்.

இதனையடுத்து வரவேற்கச் சென்றவர்கள் வந்த வழியே திரும்பினர்.

நேரம் தாழ்த்தி பலாலி வந்து சேர்ந்த திரு பூரி அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் யாழ் கோட்டை முகாமை காலை சுமார் 10 மணியளவில் வந்தடைந்தார்.

### நடந்து வந்தார்

நகருக்குச் செல்வதற்கு முகாமில் உள்ளவர்கள் வாகன ஏற்பாடுகள் செய்வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் சுமார் ஒரு மணி நேரம் கோட்டை முகாமில் காத்திருந்த திரு பூரி அதுரிவசராமற்போகவே பின்னர் அங்கிருந்து கால் நடையாக சுமார் ஒரு கிலோ மீற்றர் நடந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார்.

யாழ்நகரில் பல இடங்களுக்குச் செல்லவிருந்த திரு பூரியின் திட்டம் இதனால் குழம்பியது.

சுமார் இரண்டரை மணிநேரம் அவர் வீணே போக்க வேண்டியதாயிற்று.

திரு ஹரீசிப் பூரி, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் முதலாவது செயலாளர் ஆவர். அவர் தூதரகத்தின்மூன்றாவது அதி உயர் ராஜதந்திரி என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் ஆஸ்பத்திரியில் திரு கணபதியை ஏற்றுக்கொண்ட பின்னர் திரு. பூரி கணபதியுடன் மீண்டும் யாழ் கோட்டைக்கு கார் ஒன்றில் அனுப்பி வைக்கப்பட்டார்.

காரில் கோட்டை நோக்கிச்சென்று கொண்டிருந்த அவர்களை கடற்கரைவீதியில் வழிமறித்த போராளிகள் தொடர்ந்தும் காரில் போனால் ஏதாவது அசம்பாவிதம் நிகழலாம் எனக் கருதி அவர்களை இறங்கி நடந்து போகுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

பின்னர் திரு. பூரியும், கணபதியும் நடந்தே கோட்டை இராணுவ முகாமுக்குச் சென்றனர். (உ-10)

# திருமலையில் 8 மணி நேர மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு திருகோணமலை அலஸ் தோட்டப்பகுதியில் சிப்பாய்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பித்த மோதல் மாலை 4-30 மணிவரை சுமார் எட்டு மணி நேரம் நீடித்தது.

இந்த மோதலில் சிப்பாய்கள் உயிரிழப்புடனும் பலத்த காயங்களுடனும் முகாம் திரும்பினர் என்றும்—

தமது தரப்பில் இழப்பு ஏதும் இல்லை என்றும் விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# பேராளிகளுக்கும் இராணுவத்தில் இடமாம்

## எனினும் லலித் நிபந்தனை

கொழும்பு, ஜூலை 22

தமிழ்ப் போராளிகளையும் இலங்கை இராணுவ நிரந்தரப் படையில் சேர்த்துக் கொள்ளலாம் என்று தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்திருக்கிறார்.

எனினும் அதற்கு அவர் ஒரு நிபந்தனையும் விதித்திருக்கிறார்.

மாகாண சபைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அமுல் நடத்துவதற்கு உதவினால் போராளிகளை நிரந்தரப் படையில் சேர்த்துக் கொள்வதை இலங்கை அரசு எதிர்க்காது

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி சொன்னதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

நவ சமசமாஜக் கட்சிப் பிரமுகர்களிடம் அமைச்சர் இத்தகவலை தெரிவித்தார் என்றும் தெரியவந்துள்ளது

தமிழ்ப் போராளிகள் இலங்கைப் படையில் சேர்க்கப்பட வேண்டும்! அவர்களுக்கென்று தனிப் பிரிவு இராணுவத்தில் அமைக்கப்பட வேண்டும் — இப்படி நவ சமசமாஜக் கட்சி காரியுள்ளது தெரிந்ததே. (உ-எ)

# உணவு முத்திரைகள் பலாலி வந்தன

யாழ்ப்பாணம் ஜூலை.22

புதிய உணவு முத்திரைகளில் பெரும்பகுதி இங்கு வந்து சேர்ந்துள்ளன.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலி இராணுவ முகாமிற்கு இவை வந்து சேர்ந்தன.

அவற்றை உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி எஸ் பற்குணம் சென்று பொறுப்பேற்றார்

இந்த முத்திரைகள் தகுதி உடைய பொது மக்களுக்கு இவ்வார இறுதிக்குள் விநியோகிக்கப்படும் என்று அவர் கூறினார்.

ஆனி மாதத்துக்குரிய உணவுப் பொருள்கள் இந்த முத்திரைகளுக்கு வழங்கப்படும்.

வழக்கமாக வழங்கப்பட்ட பெறுமதியுடைய முத்திரைகளே இம்முறையும் பெரும்பாலும் வழங்கப் படும் என்றும் திரு.எஸ். பற்குணம் தெரிவித்தார். (உ-5)

# இலங்கையும் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜூலை 22

எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாக இருக்கும் காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையும் கலந்துகொள்ளாது.

இப்படி இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தென் ஆபிரிக்க மக்களின் சுதந்திரப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வண்ணம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இருந்து விலகிக்கொள்வதாக இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இப்படி இலங்கை வெளிநாட்டமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# கல்விப் பணிப்பாளர் வவுனியாவில்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வவுனியா சென்றுள்ளார்

கல்வியமைச்சின் செயலாளர், பரீட்சை ஆணையாளர் ஆகியோர் வவுனியா வரவுள்ளனர்.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைபற்றி திரு. இரா. சுந்தரலிங்கம் அங்கு கலந்தாலோசிப்பார். (இ-5)

# பூநகரியில் பாடசாலைக் கட்டடம் தகர்ப்பு

பூநகரி, ஜூலை 22

பூநகரியில் உள்ள சாமிப் புலம் பாடசாலைக் கட்டிடம் ஒன்றும் பரம்பன் கிராய் என்ற இடத்திலுள்ள மற்றொரு பாடசாலையின் இரண்டு கட்டடங்களும் இனம் தெரியாத வர்களால் குண்டு வைத்து முற்றாகத் தகர்க்கப்பட்டன. ஞாயிறு இரவு இச்சம்பவங்கள் நடந்தன

பரம்பன்கிராய் பாடசாலைக்கு இராணுவத்தினர் நடந்து வசதி தங்கி பிற்றுதல் முகாம் திரும்புவது வழக்கம் என்று கூறப்படுகிறது. (இ-124)

## தவறி விட்டது

16-ஆந் திகதி வவுனியாவிலிருந்து காரைநகர் சாலையைச் சேர்ந்த பஸ்ஸில் பிரயாணம் செய்தேன். ஆனைப்பந்தியில் இறங்கும்போது பயணப் பையைத் தவறுதலாக விட்டுவிட்டேன். அதில் இளைஞர் சிலர் தங்கள் பெற்றோரிடம் சேர்க்கும்படி என்னிடம் கொடுத்த கடிதங்கள் அடங்கும். இதை தவறுதலாக எடுத்தவர்கள் திருப்பியும் யாழ். பஸ் நிலையத்திலோ அல்லது எனது விலாசத்திலோ ஒப்படைக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

திருவிளங்கம்
122/10, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# இந்திய மீன...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கோவில்,நல்லூர் சங்கிலியன் அகதி முகாம், தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம், நல்லூர் இந்து விடுதி ஆகியவற்றிற்கு திரு. பூரி விஜயம் செய்தார்.

அங்கு உள்ள அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் இருந்த அகதி ஒருவர் இந்தி மொழியில் அவரிடம் தங்கள் நிலைபற்றி எடுத்துக் கூறினார்.

இதேவேளை வைத்தியர்களும், தொழில் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளும் அவருடன் கலந்துரையாடினர்.

மீண்டும் யாழ் ஆஸ்பத்திரிக்கு திரும்பிய பூரி யாழ் வைத்திய அத்தியட்சரிடமும் ஏனைய வைத்தியர்களிடமும் இருந்து விடைபெற்று கணபதியை அழைத்துக் கொண்டு இரண்டு மணியளவில் யாழ் கோட்டைக்கு சென்றார். (உ-6-10)

# தமிழ் மொழி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன

வடக்கு மாகாணம், முழுவதும் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையாக வசிக்கும் பிரதேசத்தை உள்ளடக்கியதுமான ஒரு மொழிமாநிலக் கோரிக்கையைத் தான் கூட்டணித் தூதுக்குழு, ஜனாதிபதியிடம் நேற்றும் வலியுறுத்தியதாக மேலும் அறியவந்தது.

### இன்று மீண்டும் சந்திப்பு

இதனிடையில் அரசு—கூட்டணிப் பேச்சுக்களில் சட்டம் — ஒழுங்கு, காணிக் குடியமர்த்தல் ஆகிய விஷயங்கள் குறித்து கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன என்றும் தெரியவருகிறது.

கூட்டணித் தூதுக்குழு மீண்டும் இன்று காலை ஜனாதிபதியைச் சந்திக்க இருக்கின்றனர். (ஆ-எ)

# வெள்ளி

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்டதை நினைவு கூர்ந்து அஞ்சலி செய்யும்படியும் தமிழருக்கு எதிராகத் தொடர்ந்து நடத்தப்படும் வன்முறைகளைக் கண்டிக்குமுகமாகவும் ஜூலை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'கறுப்பு நாளாக' அனுஷ்டிக்க அன்னையர் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது

அன்றைய தினம் கறுப்புக் கொடிகளை அன்னையர் முன்னணி சகலருக்கும் வழங்கும். (இ-எ)

# சங்கம் மூலம்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

லொறிப் போக்குவரத்துச் சங்கமூலமாகபூர்த்தி செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்று வடபிராந்திய லொறிப் போக்குவரத்துச் சங்க உறுப்பினர்களை அழைத்த யாழ் கோட்டை இராணுவ முகாம் உயரதிகாரி, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையின் பயனாக—

சங்கமூலம் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு இலகுவில் அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளும்படி வட பிராந்திய போக்குவரத்துச் சங்க செயலாளர் திரு ஆ. மு. இராஜகோபால் அறிவித்துள்ளார். (உ-10)

# நிபந்தனை . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மிழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றின் தலைவர்களை நான் சந்தித்தேன். தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் டாக்டர் பாலசிங்கத்தையும் நான் சந்தித்தேன்.

பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணும் முயற்சிகளை முறியடிக்கக் கூடியதாக செயல்பட மாட்டோம் என்று போராளிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்

ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்ற நிபந்தனையுடனான எந்தப் பேச்சுக்களிலும் போராளிகள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டது

பேச்சுக்களின் போது ஆயுதங்களைக் கீழேபோட முடியாது என்றும் போராளிகள் தெரிவித்தனர்.

[illegible] தேவ நாணயக்கார தெரி[illegible] (உ-எ)

யாழ் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம்
(JAFFNA TELEPHONE EXCHANGE)
இப்பொழுது சீராகச் செயற்படுகிறது.
ஆனால்,
இன்றைய காலகட்டத்தில் எது நிரந்தரம்? எது நிச்சயம்? உள்நாட்டில் பிறநாட்டில் உள்ள அன்பிற்குரியவர்களுடனோ பெருமதிப்புக்குரிய பெரியோர்களையோ ரெலிபோன் பேசி ஆலோசித்துச் செயலாற்ற வேண்டி இருப்பின்
ரெலிகுளோப் மூலமாக
இன்றே ரெலிபோன் செய்க !
நாளை என்றது நிச்சயமற்றது ! !
உலகெங்கனும் உடனடியாக நீங்கள் ரெலிபோன் பேச ஆறு ரெலிபோன் லைன்களை ஈடுபடுத்தி அதிசிறந்த சேவை தருகிறது
ரெலிகுளோப்
ரெலிகுளோப் ரெலிபோன்: 25088

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், அச்சகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்ட திகதி 22—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 /86.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org